**செய்தி வெளியீடு எண்: 620** **நாள்:27.08.2020**

**<u>இன்று (27.8.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தலைமையில் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில், மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தடுப்புப் பணிகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை:</u>**

அனைவருக்கும் வணக்கம்.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்று உலகளவில் பரவி, ஒட்டுமொத்த மக்களின் வாழ்வாதாரம் நிலைகுலைந்து இருக்கின்ற இந்தச் சோதனையான காலக்கட்டத்தில், தமிழகத்தில் இந்த நோய் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தி மக்களைக் காப்பாற்ற, மாண்புமிகு அம்மாவின் அரசு, கடுமையான நடவடிக்கைகளை அனைத்து வகைகளிலும் மேற்கொண்டு வருகிறது.

இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் சராசரியாக நாளொன்றுக்கு சுமார் 70,000 பரிசோதனைகளை மேற்கொள்கிறோம். இந்நோய் தொற்றுக்கு மருத்துவர்கள் சரியான முறையில் சிகிச்சையளிக்கும் காரணத்தாலும், இந்தியாவில், அதிக பரிசோதனைகள் செய்யக்கூடிய முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்வதாலும், இந்நோய்த் தொற்று பரவல் குறைக்கப்பட்டு நாட்டிலேயே, தமிழ்நாட்டில்தான் குணமடைந்தோர் எண்ணிக்கை அதிகமாகவும், இறப்பவர்களின் எண்ணிக்கை குறைவாகவும் உள்ளது.

இத்தொற்றால் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிய நியமிக்கப்பட்ட பணியாளர்கள் வீடு வீடாகச் சென்று, காய்ச்சல், சளி, தொண்டை வலி, இருமல் போன்ற அறிகுறிகள் தென்பட்டவர்களைக் கண்டறிந்து, உடனடியாக பரிசோதனைக்குட்படுத்தி சிகிச்சை அளிக்கப்படுகிறது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய்ப் பரவலைத் தடுப்பதற்கு சுமார் 438 காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டு, 16,158 நபர்கள் பரிசோதிக்கப்பட்டுள்ளனர். இம்மாவட்டத்தில் 31 கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகள் உள்ளன. நோய் தொற்றுப் பரவலைத் தடுத்தல், தொற்று ஏற்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை அளித்து குணமடையச் செய்தல் ஆகிய இரண்டிலும் அரசால் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அதோடு, வருவாய்த் துறை, உள்ளாட்சித் துறை, காவல் துறை ஆகிய துறைகள் இணைந்து, பாதிக்கப்பட்டவர்கள் அதிகமுள்ள பகுதிகளில், கிருமிநாசினி அடிக்கடி தெளிக்கப்படுகிறது. பொதுக்கழிப்பறைகள் கிருமிநாசினி கொண்டு அடிக்கடி சுத்தப்படுத்தப்படுகிறது. இதனால் நோய் தொற்றுப் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

நடமாடும் மருத்துவமனைகள் மூலம் நேரில் சென்று பரிசோதித்து, நோய் தொற்று உள்ளவர்களுக்கு மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இது ஒரு புதிய நோயாக இருப்பதால் இதற்கு இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. இருந்தாலும், உலக சுகாதார அமைப்பு, மத்திய சுகாதாரத் துறை, ICMR மற்றும் மருத்துவ நிபுணர்கள் அளிக்கின்ற ஆலோசனையின்படி, நம்முடைய மருத்துவர்கள் இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை அளித்து வருவதால், குணமடைந்து வீடு திரும்புபவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதை பார்க்கிறோம். சரியான முறையில் சிகிச்சையளித்த காரணத்தால், நாட்டிலேயே தமிழ்நாட்டில் தான் இந்த நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டு இறப்பவர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது. இது ஒரு சவாலான நேரம். சோதனையான காலம். இந்தக் காலக்கட்டத்தில் ஒட்டுமொத்த மக்களும் அரசுக்கு ஒத்துழைப்பு நல்கினால்தான் இந்நோய் தொற்றுப் பரவலைத் தடுக்க முடியும்.

இந்த நோய் எவ்வாறு பரவுகிறது என்றே கண்டுபிடிக்க முடியவில்லை. பரிசோதனை செய்துதான் கண்டுபிடிக்கிறோம். இந்த நோய் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் சிலருக்கு அறிகுறியே தென்படுவதில்லை. நான் ஒவ்வொரு மாவட்டமாக ஆய்வுக் கூட்டத்திற்கு செல்லும்போது, அம்மாவட்ட முக்கியப் பிரமுகர்களை பரிசோதனைக்கு உட்படுத்தும்போதுதான் அவர்களுக்கு இந்நோய் தொற்று இருப்பது தெரிய வருகிறது. இங்கு வரும்பொழுதும் நான்கூட பரிசோதனை செய்துவிட்டு தான் வந்துள்ளேன். ஒவ்வொரு மாவட்டத்திற்குச் செல்லும்போதும், நானும், என்னுடன் வருபவர்களும் பரிசோதனை மேற்கொண்டு, அதில் நெகடிவ் என்று வந்தால்தான் வருகிறோம். ஏனென்றால் நம்மூலம் மற்றவர்களுக்கு பரவி விடக்கூடாது. தற்பொழுது இருக்கக்கூடிய சூழ்நிலையில் வித்தியாசமான நோயைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதில் அனைவரும் கவனமாக இருக்க வேண்டும். இது ஒவ்வொருவரின் கடமை. அரசு அறிவிக்கின்ற வழிமுறைகளை முழுமையாக பொதுமக்கள் கடைபிடித்தால் இந்த நோய் தொற்றுப் பரவலிலிருந்து அனைவரும் பாதுகாத்துக்கொள்ள முடியும். இதை நான் ஒவ்வொரு கூட்டத்திலும் சொல்லி வருகிறேன். அதை மக்கள் முழுமையாக எடுத்துக்கொள்ள வேண்டும். பணிபுரிகின்ற இடங்களிலும் இடைவெளியை பின்பற்றிதான் பணி செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளில் உள்ள கழிப்பறைகளை அடிக்கடி

கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்ய வேண்டுமென்று நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டு, அதை அவர்கள் பின்பற்றி வருகிறார்கள். அரசு எடுத்த நடவடிக்கைகள், மருத்துவர்கள் அளித்த சரியான சிகிச்சை காரணமாக இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் இந்நோய் தொற்றைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறோம்.

கொரோனா ஊரடங்கு காலத்திலும், வேளாண் தொழிலில் 100 சதவிகிதப் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டு, அப்பணிகள் நடைபெற்று வருகின்றன. தொழிற்சாலைகளில் முதற்கட்டமாக 50 சதவிகிதமும், பின்னர் 100 சதவிகிதமும் பணியாளர்களை வைத்து தொழிற்சாலைகள் இயங்க அனுமதி அளித்து, அவைகளும் இயங்கி வருகின்றன. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் பெரும்பாலும் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. கொரோனா காலத்திலும், இந்தியாவிலேயே அதிக முதலீட்டை ஈர்த்த மாநிலம் தமிழ்நாடுதான். அதேபோல, இந்திய அளவில் GDP 4% உள்ளது. ஆனால், தமிழகத்தில் GDP 8%ஆக உள்ளது. எவ்விதத்திலும் வேலைவாய்ப்பு இல்லை என்ற நிலை இங்கு கிடையாது. வெளிமாநிலங்களிலிருந்து சுமார் 7.50 இலட்சம் நபர்கள் தமிழ்நாட்டில் தங்கிப் பணிபுரிந்து வந்தார்கள். அந்தளவிற்கு தொழிற்சாலைகளும் வேலைவாய்ப்புகளும், தொழிற்சாலை சார்ந்த பணிகளும் தமிழ்நாட்டில் உள்ளன. இப்பணிகளுக்கு நம் மாநிலத் தொழிலாளர்கள் மட்டுமன்றி வெளிமாநிலத் தொழிலாளர்களையும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

கொரோனா வைரஸ் காரணமாக சுமார் 4.50 இலட்சம் வெளிமாநிலத் தொழிலாளர்கள் தங்கள் சொந்த மாநிலங்களுக்குச் செல்ல வேண்டுமென்று விருப்பம் தெரிவித்தவுடன், அரசாங்கம் அதற்கான முழுச் செலவையும் ஏற்று அவர்களை அனுப்பி வைத்தது. தமிழ்நாட்டில் தங்கி பணிபுரிந்து வந்த வெளிமாநிலத் தொழிலாளர்களுக்கு விலையில்லா அரிசி, எண்ணெய், பருப்பு வழங்கப்பட்டன, மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. நம் மாநிலத் தொழிலாளர்களுக்கு செய்த உதவிகள் அனைத்தையும் வெளிமாநிலத் தொழிலாளர்களுக்கும் செய்தோம்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2015–ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர் மாநாட்டை நடத்தி சுமார் 2.42 இலட்சம் கோடி ரூபாய் தொழில் முதலீட்டை ஈர்த்தார்கள். அதேபோல, அம்மாவின் அரசும் 2019–ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர் மாநாட்டை நடத்தி, சுமார் ரூபாய் 3 இலட்சம் கோடிக்கு புரிந்துணர்வு

ஒப்பந்தங்கள் போடப்பட்டு, தற்பொழுது அந்தத் தொழில் நிறுவனங்கள் படிப்படியாக தொழில் தொடங்க ஆரம்பித்துவிட்டனர். ஆகவே, தமிழகத்தில் அதிகளவில் தொழில் தொடங்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்பதை தெரிவிக்க விரும்புகிறேன்.

சுயஉதவிக் குழுக்களுக்கு அதிகமான கடனுதவி வழங்கிய மாநிலம் தமிழ்நாடு. நாகப்பட்டினத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் **8,840** சுயஉதவிக் குழுக்களில் **94,960** உறுப்பினர்கள் இடம் பெற்றிருக்கின்றனர். மூன்றாண்டுகளில், இந்த சுயஉதவிக் குழுக்களுக்கு ரூபாய் **762.02** கோடி கடன் வழங்கப்பட்டிருக்கின்றது. நடப்பாண்டில் ரூபாய் **568** கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை **2,548** குழுக்களுக்கு, ரூபாய் **63.25** கோடி வழங்கப்பட்டிருக்கிறது. சுயஉதவிக் குழுக்கள் தமிழகத்தில் மிகச் சிறந்த முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இத்தருணத்தில் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள், உழைக்கும் மகளிருக்கு மானியத்துடன் அம்மா இருசக்கர வாகனம் வழங்கப்படும் என்று அறிவித்ததை தொடர்ந்து, ஒவ்வொரு அம்மா இருசக்கர வாகனத்திற்கும் ரூபாய் **25,000/–** மானியமாக வழங்கப்படுகிறது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் மட்டும் கடந்த மூன்றாண்டுகளில் **4,347** உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கப்பட்டிருக்கின்றது, அதற்காக வழங்கப்பட்ட மானியம் ரூபாய் **10.85** கோடி ஆகும்.

கொரோனா நோய்த் தொற்று இருக்கும் இந்த காலக்கட்டத்தில், முகக்கவசம், சானிடைசர் போன்றவை தயாரிப்பதற்காக, **2,233** சுயஉதவிக் குழுக்களுக்கு **17** கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டிருக்கிறது.

குடிமராமத்துத் திட்டத்தின் கீழ், நாகப்பட்டினம் மாவட்டத்தில் நிறைய பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, முழுக்க, முழுக்க விவசாயிகளின் பங்களிப்புடன் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன.

சரியான முறையில் கால்வாய்கள் தூர்வாரப்பட்ட காரணத்தால், குறிப்பிட்ட காலத்தில் தண்ணீர் கடைமடை பகுதி வரை வந்து சேர்ந்தது. அதனால் விவசாயிகள் உரிய காலத்தில் சாகுபடி மேற்கொண்டதால் நல்ல விளைச்சல் கிடைத்தது. கடந்த காலங்களில், டெல்டா பகுதிகளில் **23** இலட்சம் மெட்ரிக் டன் நெல் தான் அரசு கொள்முதல் நிலையம் மூலம் கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு, **28** இலட்சம் மெட்ரிக் டன் நெல்லை கொள்முதல் செய்து சாதனை படைத்திருக்கிறோம்.

அமெரிக்கன் படைப்புழுவால் மக்காச்சோளம் பயிர் பாதிக்கப்பட்டு, அந்த விவசாயிகளின் பாதிப்பை ஈடுசெய்யும் வகையில், கடந்த ஆண்டு மாண்புமிகு அம்மாவின் அரசு இழப்பீட்டுத் தொகையை வழங்கியது. இந்த ஆண்டும் அமெரிக்கன் படைப்புழுவால் மக்காச்சோளம் பயிர் பாதிக்கப்பட்டது. மக்காச்சோளம் பயிரிட்ட நிலப் பகுதிகளில் அரசாங்கமே மருந்து தெளித்தது.

அதேபோல, பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், நாகப்பட்டினம் மாவட்டத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் 7,27,677 பதிவு செய்யப்பட்ட விவசாயிகளில் 4,22,998 விவசாயிகளுக்கு பயிர் இழப்பீட்டுத் தொகையாக ரூபாய் 1,051 கோடியே 73 லட்சம் இழப்பீடாக பெற்றுத் தந்த அரசு அம்மாவின் அரசு.

அதேபோல, டெல்டா மாவட்ட வேளாண் பெருமக்களின் கோரிக்கையை உணர்ந்து, காவேரி டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து, வரலாற்றுச் சிறப்பு மிக்க சட்டம் இயற்றியதன் மூலம், டெல்டா பகுதிகளில் வேளாண் தொழிலுக்கு பாதுகாப்பை ஏற்படுத்திய அரசு அம்மாவின் அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவேரி நதிநீர் தொடர்பாக, நம்முடைய உரிமையைப் பெறுவதற்காக சுமார் 50 ஆண்டுகாலம் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து, நம்முடைய விவசாயிகள் ஏங்கியிருந்த நிலையில், அவர்களுக்கு விடிவு காலம் கிடைக்கின்ற விதமாக, நல்ல தீர்ப்பை பெற்றுத் தந்த அரசும் அம்மாவினுடைய அரசு தான். அதேபோல, நமக்கு கிடைக்கவேண்டிய பங்கு நீரை சட்டத்தின் வாயிலாக பெற்றுத் தந்த அரசும் அம்மாவின் அரசு தான் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் அதிகமான தடுப்பணைகள் கட்டித் தந்திருக்கிறோம். கடல்நீர் உட்புகாத வண்ணம் நீரொழுங்கிகள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. ஆதனூர் குமாரமங்கலத்தில் ஒரு கதவணை கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில், ரூபாய் 367 கோடி மதிப்பீட்டில், அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, குடியிருப்புகள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாடு முழுவதும் ஒரே நேரத்தில் 11 அரசு மருத்துவக் கல்லூரிகளை பெற்று தந்த ஒரே மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான். இவையெல்லாம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு ஏழை, எளிய மக்கள் மருத்துவ சிகிச்சை

பெறுவதில் எந்த குறைபாடும் இருக்காது. தனியார் மருத்துவமனையை விட கூடுதல் வசதியுடன் இம்மருத்துவ கல்லூரி மருத்துவமனைகள் அமையவிருக்கின்றன.

**நாகப்பட்டினம் மாவட்டத்தை பிரிந்து மயிலாடுதுறையை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்க வேண்டும் என்ற நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் மயிலாடுதுறையை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் தோற்றுவிப்பதற்கு கருத்து கேட்புக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிக்கிறது, விரைவாக இந்த புதிய மாவட்டம் தோற்றுவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டு, கல்வியிலும் ஒரு முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்திய அளவில் உயர்கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ள மாநிலம் தமிழ்நாடு தான்.

மாண்புமிகு அம்மா அவர்கள் 2011–ல் தமிழகத்தில் முதலமைச்சராக பொறுப்பேற்ற போது, 32 சதவீதம் பேர் தான் உயர்கல்வி படித்துக் கொண்டிருந்தார்கள். நாம் அதிகமான கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை கொடுத்திருக்கின்றோம். அதேபோல, மருத்துவக் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி, ஐடிஐ போன்ற கல்லூரிகளை தமிழகத்தில் தோற்றுவித்ததன் காரணமாக, ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்த மாணவர்களும் அரசு கல்லூரிகளில் உயர்கல்வி படிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம். அதனால் இப்பொழுது 50 சதவீதம் பேர் உயர்கல்வி படிக்கிறார்கள். அதனால் இந்தியாவிலேயே உயர்கல்வி படிப்பவர்களில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. அதேபோல, பள்ளிகளுக்கு கூடுதல் கட்டடங்கள் கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இவ்வளவு வசதிகளையும் அம்மாவின் அரசு கல்வி மேம்பாட்டிற்காக செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நல்ல சுகாதார வசதி, சாலை வசதிகள் செய்து கொடுத்திருக்கிறோம். நீர் மேலாண்மைத் திட்டத்தின் மூலமாக ஆங்காங்கே தடுப்பணை கட்டுதல், புதிய தொழிற்சாலைகளை அதிக அளவில் நிறுவுதல் போன்றவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் உணவுப் பூங்கா 250 ஏக்கர் நிலப்பரப்பில் ரூபாய் 1000 கோடி மதிப்பீட்டில் உருவாக்க இருக்கிறோம். இதனால் 1800 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும். தனியார், மத்திய அரசு, மாநில அரசு இணைந்து ஒரு Readymade ஜவுளிப் பூங்கா ஒன்றும் இந்த மாவட்டத்தில் அமைக்க இருக்கிறோம் என்ற செய்தியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.** இந்த மாவட்டத்தில், தரங்கம்பாடியிலும், வெள்ளப்பள்ளம், ஆற்காட்டுத்துறை ஆகிய இடங்களில் தலா ஒரு மீன்பிடி துறைமுகம் அமைக்கப்பட்டுள்ளன. எனவே, இந்த மாவட்டத்தின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்தையும் எங்களுடைய அரசு செய்து கொடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொரோனா வைரஸ் நோய் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கு மாவட்ட நிர்வாகம் முனைப்புடன் செயல்பட்டுக் கொண்டிருப்பதற்கு என்னுடைய பாராட்டுதல்களை தெரிவித்து கொள்வதோடு, நாகப்பட்டினம் மாவட்ட மக்கள் மாண்புமிகு அம்மாவின் அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு துணை நின்று கொரோனா வைரஸ் நோய் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

* * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**